ISSN:2582-9599



# முருக தத்துவம்: ஆறுரு மைந்தன்

ச. பாலமணிகண்டன்
தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி,
மதுரை.bmanikandan511@gmail.com

36

**முகவுரை**

பண்டையப் பனுவல்களில் கூறப்படும் கடவுள்களில் முருகனுக்குத் தனித்த இடமுண்டு. தொல்காப்பியம் முருகனைச் சேயோன் என்கிறது. ஐவகை நிலக் கடவுள்களில் குறிஞ்சி நிலக்கடவுளாகக் குறிப்பிடுகிறது. முருகனின் தோற்றம் முதலாக அவனது உருவஅமைப்பு வரையிலானப் பதிவுகள் செவ்வியல் இலக்கியக் கால கட்டத்திலேயே காணப்படுவதால் முருகவழிபாடு காலப்பழமை வாய்ந்தது. முருகனது பல் திருக்கோலமும் அவனது திருக்கையில் ஏந்திய கருவிகளும் காலந்தோறும் மக்களால் வழிபாடு செய்யப்படும் உலகளாவிய சிறப்புடையது. மற்ற கடவுள்களை விட முருகனது வடிவச்சிறப்பு வழிபடும் மாந்தர் தம் உள்ளம் நிறைய அவனது பிறப்புத் தொன்மம் ஒரு காரணமாகும். அது மட்டுமல்லாது பரிபாடல் திருமுருகாற்றுப்படை போன்றவற்றில் முருகனது தோற்றச் சிறப்பு கூறுப்படுவதோடு கந்தபுராணம், திருப்புகழ், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் மற்றும் பாம்பன் சுவாமிகள் போன்றோரின் பாடல்கள், பிற்கால முருக இலக்கியங்கள் என முருகத்துதி நூல்கள் காலந்தோறும் அவனது வடிவச்சிறப்பை போற்றுவது மற்றொரு காரணமாகும். அத்தகு முருகனின் திருக்கோலச் சிறப்பை **'முருக தத்துவம்: ஆறுரு மைந்தன்'** எனும் தலைப்பில் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**கருணையில் தலைமை**

பதி, பசு, பாசம் எனும் முப்பொருளுக்கும் சிறப்பியல்பு (சொரூப நிலை), பொது இயல்பு (தடத்த நிலை) என இரண்டு இயல்புகளைச் சைவசித்தாந்தம் கூறுகிறது. பதியாகிய சிவத்தின் இயல்பானது அனைத்துத் தத்துவங்களையும் கடந்து எண்ணங்களுக்கு எட்டாது நிற்கின்ற சொரூப நிலை, உயிர்கள் மீது வைத்த கருணையால் ஐந்தொழில்புரியும் தடத்த நிலை என இரண்டாகும். சொரூப நிலையில் ஒரு குறியும் கோலமும் தொழிலும் இல்லாது நிற்கின்ற சிவம் தடத்த நிலையில் பல குறியும் கோலமும் தொழிலும் உடையவனாய் நிற்பது உயிர்கள் பொருட்டே. உயிர்கள் அனைத்தும் உய்வடைய வேண்டும் எனும் நோக்கில் தான் பல்வடிவம் தாங்குதலானது அமைகிறது. முருகனின் தோற்றம் நிகழ்ந்ததும் அந்நோக்கில் தான். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் வாழ்வளிக்க சிவமே முருகனாகத் தோன்றினார்.

தேவர்கள் வணங்கி தங்களின் நிலையைக் கூற சிவபெருமான் தான் கொண்டுள்ள ஆறு திருமுகங்களிலும் திகழும் நெற்றிக்கண்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொர் அக்கினிப் பொறியை உண்டாக்கினார். அந்நெருப்பானது உலகெங்கும் பரவி அச்சம் விளைவித்தது. தேவர்கள் அனைவரும்

இறைவனை தஞ்சம் அடைய வாயுதேவனையும், அக்கினி தேவனையும் இப்பொறிகளை சுமந்து கங்கை ஆற்றில் விடுங்கள்; அக்கங்கையாறு ஆறுபொறிகளையும் சரவணப்பொய்கையில் அடையும்படி சேர்க்கும் என்று இறைவன் விளம்பினார். சரவணப் பொய்கையில் சேர்ந்த ஆறுநெருப்பு பொறிகளும் ஒரு திருமேனிப் பெற்று கருணை மிகுந்த ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கைகளும் கொண்டு உலகத்தார் உய்வு பெறும் பொருட்டு முருகன் தோன்றினார். சிவத்தால் அருளப் பெற்ற சோதி பிழம்பே முருகனாக உதித்ததை,

**“அருவமும் உருவு மாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்**
**பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்**
**கருணைகூர் முகங்கள் ஆறுங் கரங்கள்பன் னிரண்டு கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய”**[1]

என்று கந்தபுராணம் கூறுகிறது.

கச்சியப்பர் கூறும் முருகனின் தோற்றத்தை அவ்வாறே திருப்பரங்கிரி முருகன் பிள்ளைத் தமிழில்,

**“அங்கரிய தங்கிளைஞர் நட்பினர் மெலிந்துவிடில்**
**அன்புடன் தாங்குவதுபோல்**
**அனல்இறையும் அவன்நண்ப னும்சுமந் தேபின்னர்**
**அங்கங்கை யாற்றில் விடஅக்**
**கங்கைதன் மைந்தனாம் என்றுதன் னியல்பினைக்**
**காட்டாது பாதுகாத்துக்**
**கணப்பொழு தினிற்சர வணப்பொய்கை யுள்விடக்**
**கங்கள்இரு மூன்றுகொண்டு”**[2]

என்று அருணாசலக்கவிராயர் குறிப்பிடுகிறார். தன்முனைப்புடைய அசுரர்களின் ஆணவத்தை நீக்கும் தன்மையில் முப்புரங்களை எரித்த இறைவனின் எல்லாச் செயல்களும் கருணையால் செய்யப்படுவையாகும். அக்கினிப் பொறிகளைத் தந்து முருகனை உதிக்கச் செய்த செயலும் கருணையான செயலே. அச்செயல் அவரது கருணைச் செயல்களில் தலைசிறந்ததாகும்.

**ஆறு திருவடிவங்கள்**

முருகனைச் சிவனுடைய மைந்தனாக காட்டுவது இன்று நேற்றல்ல சங்க காலத்திலிருந்தே வழக்கில் உள்ளது. சங்கப்பனுவல்களும், இரட்டைக் காப்பியங்களும் முருகன் சிவனுடைய திருமகன் என்பதை,

**“ஆலமர் செல்வன் அணிசால் மகன்”**[3]
**“கயிலைநன் மலையிறை மகன்”**[4]
**“ஆலமர் செல்வன் மகன் விழாக் கால்கோள்**
**காண்மினோ எனக் கண்டு நிற்குநரும்”**[5]

என்றெல்லாம் குறிப்பிடுகின்றன. முருகனைப் போற்றும் முருக இலக்கியங்களும் சிவனே முருகன்,

சிவனின் திருமகன் முருகன் எனப் பலவாறாகப் போற்றுகின்றன. சிவனே ஆறுமுகம் கொண்ட திருவுருவத்தோடு சரவணப் பொய்கையில் உள்ள மணம் கமழும் தாமரை மேல் எழுந்தருளியுள்ளதாக கந்தபுராணம் காட்டுகிறது. இதனை கந்தபுராணச் சுருக்கத்தில்,

**“சங்கர னேமுரு கேசனெனச் சீர்**

**தங்க விருந் திடவண்டர்கள் கண்டார்”**[6]

என்று சம்பந்தர் சரணாலயர் காட்டுவார். திருமாலின் இதயத்தில் அருளோடு ஞானஒளி வீசும் சிவபெருமான் போலவும், விராட புருடனது இதயக் கமலமாகிய சிதம்பரத்தில் விரும்பி வீற்றிருக்கும் சிவபிரான் போலவும், சிவம் படைப்பைத் தொடங்கிய காலத்தில் உயிர்களைப் படைத்துத் தாமரை மலரில் வீற்றிருந்தது போலவும், முருகன் தாமரை மலரில் வீற்றிருக்கும் காட்சி பலவாறாகக் கூறப்படுவதோடு சிவனும் முருகனும் வேறல்லர் என்பதை வலியுறுத்துவதாக உள்ளதையும் கந்தபுராணத்தில் காணலாம்.

சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக இருந்த முருகனை திருமால் மற்றும் தேவர்கள் கூறிய வண்ணம் கார்த்திகைப் பெண்கள் வளர்க்கிறார்கள். முருகன் அவனுடைய ஆறு வடிவங்களிலும் பல வித்தக விளையாட்டை நிகழ்த்துகிறான். ஓர் உருவம் தூங்க செய்தான்; ஓர் உருவம் பால் பருகுவதாக செய்தான்; ஓர் உருவம் சிரித்தவறாக இருக்கச் செய்தான்; ஓர் உருவம் விளையாடச் செய்தான்; ஓர் உருவம் காரணம் இல்லாமல் அழச் செய்தான். ஒவ்வொரு உருவமும் தவழ்தல், மெல்ல தளர்ந்து நடத்தல், நிற்க முடியாமல் விழுதல், பொய்கை தோறும் சுற்றுதல், தாயின் மடியில் அமர்தல், கூத்தாடுதல், கை தட்டுதல், பாடச் செய்தல் போன்ற செயல்களைச் செய்கிறது. சரவணப் பொய்கையில் விளையாடி கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெற்ற முருகனைச் சிவனும் உமையவளும் சரவணப் பொய்கையில் காண வருகிறார்கள். உமையவள் ஆறு வடிவங்கள் கொண்ட முருகனைக் கையில் எடுக்கும் போது முருகனின் ஆறு திருவடிவங்களும் ஆறு திருமுகங்கள், பன்னிரு திருக்கரங்கள் அமைந்த ஒரு வடிவமாகியது. ஆறு வடிவமும் ஒரு வடிவமாகிட முருகன் கந்தன் எனும் பெயரைப் பெற்றான்.

**ஆறு திருமுகங்கள்**

இயல்பாகவே சிவபிரான் ஆறு திருமுகங்களைக் கொண்டவன். இருப்பினும் ஆறாவதாகிய அதோமுகம் தோன்றாது நிற்க, தோன்றி நிற்பன ஐந்து திருமுகங்களாகும். திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் சூரபதுமனை வெல்ல நீங்கள் உங்களை ஒத்த புதல்வனைத் தோற்றுவிக்க வேண்டும் என்று விண்ணப்பிக்கிறார்கள். அப்போது ஆறு திருமுகங்களோடு எழுந்தருளி இருக்கும் சிவம் ஆறுமுகத்திலும் ஆறு அக்கினிப் பொறிகளைத் தோற்றுவித்தால் முருகன் ஆறுமுகமானவனானான். முருகன் ஆறுமுகம் கொண்டவன் என்பதை,

**“குருகொடு பெயர்பெற்ற மால்வரை யுடைத்து**

**மூவிரு கயந்தலை முந்நான்கு முழவுத்தோள்”**[7]

என்று பரிபாடல் கூறுகிறது. பரிபாடல், திருமுருகாற்றுப்படை சிலப்பதிகாரம் போன்ற பழம்பெரும்

பனுவல்கள் முருகனின் திருமுகச் சிறப்பைக் கூறுகின்றன. எண்குணத்தானாகிய சிவனின் குணங்களை ஆறாக அடக்கிச் சொல்வதும் உண்டு. அவனது ஆறு குணங்களை முற்றறிவு, வரம்பில் இன்பம், இயற்கை அறிவு, தன்வயம், குறைவில் ஆற்றல், வரம்பில் ஆற்றல் என ஆன்றோர் கூறுவர். ஆறு குணங்களுமே முருகனுடைய ஆறு திருமுகங்களாகவந்தது. இதனை,

**"மூவிரு குணனும் சேய்க்கு முகங்களாய் வந்தது என்ன"**[8]

என கந்தபுராணம் கூறுகிறது.

ஆறுமுகங்களின் இயல்புகளை சங்கப் பனுவலானதும், பதினொன்றாம் திருமுறையில் இடம்பெற்றதுமான திருமுருகாற்றுப்படையே முதன் முதலில் பட்டியலிடுகிறது. ஆறுமுகங்களில் முதல்முகம் உலகின் புறஇருளை அகற்றுவது. இரண்டாவது முகம் அடியாருக்கு அருளுவது. மூன்றாவது முகம் அந்தணரின் வேள்விக்கு இடையூறு நேராதபடி காப்பது. நான்காவது முகம் வேத நூல்களால் காட்டமுடியாது எஞ்சியப் பொருள்களை அன்பர்களின் பொருட்டு ஆய்ந்துணர்த்தி திங்கள் போல திசை விளக்குவது. ஐந்தாவது முகம் அசுரர்களை அழித்த போர் சிறப்புடையது. ஆறாவது முகம் குறவர் மடமகளாகிய வள்ளியுடன் மகிழ்வோடு பொருந்தி நகைபுரியும் தன்மையது என வரிசைப்படுத்துகிறது. நக்கீரர் தவிர முருகன் புகழ்பாடும் அருணகிரிநாதர் **'ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே'** எனும் திருப்புகழிலும், சிற்றிலக்கிய வேந்தராகிய குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவிலும் ஆறுமுகங்களின் சிறப்பைக் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு முகத்தையும் தனித்தனியே குமரகுருபரர் திருமுகம், மலர்முகம், கமலமுகம், மதிமுகம் (முகமதி), வாசமலர் வதன மண்டலம், தெய்வத்தாமரை முகம் (தெய்வமுகத்தாமரை) எனப் போற்றி ஆறுமுக இயல்பை உரைக்கின்றார்.

முருகனின் கருணைகூர் முகங்களின் சிறப்பைக் கூறுவதே நோக்கம் என்பதால் நக்கீரர் கூறுவதிலிருந்து அருணகிரிநாதர் மற்றும் குமரகுருபரர் கூறும் முகங்களின் சிறப்பு சிறிது வேறுபடுகிறது. இருப்பினும் மூவரின் கருத்துகளும் முருகனின் சிறப்பையே எடுத்துரைக்கின்றன. திருமுருகாற்றுப்படை முருகனைப் போற்றும் தனிப்பனுவல்களில் முதலில் தோன்றிய பனுவலென்பதால் அதில் கூறப்படும் ஆறுமுகங்களின் கடமைகளை **'சுப்பிரமணியர் அகவல்'** எனும் பிற்கால நூலில்,

**"உலகத் திருளளைக் கெடுத்த தொருமுகம்**
**உலகத் தவர்க்கருள் கொடுத்த தொருமுகம்**
**மறையவர் வேள்வியைக் காத்த தொருமுகம்**
**மறைபொருள் திசைதொறும் விளக்கிய தொருமுகம்**
**பகைவரா மசுரரை வதைத்த தொருமுகம்**
**மகிமைசேர் வள்ளியை வேட்ட தொருமுகம்"**[9]

என்று முருகாற்றுப்படை கூறுவது அவ்வாறே கருத்தொற்றுமையாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**பன்னிரு திருக்கரங்கள்**

பன்னிரு திருக்கரங்களில் ஒரு கை தேவர்கள் விரும்பி உண்ணும் அமுதத்தை வழங்குவது. ஒரு கை தேவ மாதர்கள் சிலர் விரும்ப அவர்களுக்கு மனம் இரங்குவது. ஒரு கை மழையைப் பெய்விப்பது. ஒரு கை பூ மாலைகளை ஒன்றியிருக்கச் சேர்க்கின்றது. ஒரு கை மார்பில் சின் முத்திரையோடு விளங்குகின்றது. இடப்பக்கத்து இடையில் வைக்கப்பட்டுள்ளது ஒரு கை. வலத்துடை மேல் வைக்கப்பட்டுள்ளது ஒரு கை. மணிகள் நெருங்கிய சிறிய தோள்வளை பொருந்தியது ஒரு கை. ஒலிக்கும் மணியை அடிக்கின்ற ஒரு கை. பகைவர் வெல்ல வருகின்ற போர்க்களத்தில் அங்குசம் விளங்க அமைகின்ற ஒரு கை. பகைவர் நடுங்கும் வண்ணம் கேடயத்தைச் சுழற்றுகின்ற ஒரு கை. ஒளி வீசும் வாளை வீசுகின்றது ஒரு கை எனப்ப ன்னிரு திருக்கரங்களின் பெருமை போற்றப்படுகிறது. நக்கீரர், குமரகுருபரர் இருவரும் இப்பன்னிரு திருக்கரங்களின் செயல்களைக் காட்டுகின்றனர். இவர்களை அடியொற்றி பிறநூல்களும் அவற்றின் சிறப்பை எடுத்துரைக்கின்றன. இருவர் குறிப்பிடும் கருத்தையும் ஒருசேர நோக்குவது காட்டத்தக்கது. உரையாசிரியரான அருணை வடிவேலனார் அவர்தம் கந்தர்கலிவெண்பா உரை நூலில் திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா காட்டும் திருக்கரங்களின் செயல்களை ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

| வ.எண். | நக்கீரர் | குமரகுருபரர் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒரு கை | தேவர்க்கு ஆரமுதம் உதவும் திருக்கரமும் |
| 2. | ஒரு கை வான் அர மகளிர்க்கு வதுவை சூட்ட | சூர் மகளிர் மேவக் குழைந்து அணைந்த மென்கரமும் |
| 3. | ஒரு கை நீள்நிற விசும்பின் மலிதுளி பொழிய | ஓவாது மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல் சேர அணிந்த |
| 4. | ஒரு கை தாரொடு பொலிய<br>ஒருகை மார்பொடு விளங்க | திருக்கரமும்<br>மார்பகத்தில் வைத்த கரமும் |
| 5. | உக்கம் சேர்த்தியது ஒருகை | வாம மருங்கிற் கரமும் |
| 6. | நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின் மிசை | குறங்கில் உய்த்த ஒரு கரமும் |
| 7. | அசைஇயது ஒருகை<br>ஒருகை கீழ் வீழ் தொடியொடு மீ மிசைக் | மொய்த்த சிறுதொடி சேர் கையும் |
| 8. | கொட்ப<br>ஒருகை பாடுஇன் படுமணி இரட்ட | மணி சேர்ந்த தடங்கையும் |
| 9. | அங்குசம் கடாவ ஒருகை | கறுவு சமர் அங்குசம் சேர் கையும் |
| 10. | இருகை ஐஇரு வட்டமொடு எஃகு வலம் | தெறுபோர் அதிர் கேடகம் சுழற்றும் |
| 11. | திரிப்ப<br>இருகை ஐஇரு வட்டமொடு எஃகும் வலம் திரிப்ப | அங்கைத் தலமும்<br>கதிர்வாள் விதிர்க்கும் கரமும் |

இத்திருக்கரங்கள் பன்னிரண்டும் உயிர்கள் மீது முருகன் வைத்த கருணையை வெளிப்படுத்துவதாகும்.

**திருக்கோலச் சிறப்பு**

முருகன் என்றால் அழகன் என்று கூறப்படுவதற்கேற்ப அவனது வடிவச்சிறப்பு போற்றப்படுகிறது. அழகுத் திறமுடைய திருவடிவம் கொண்ட முருகன் ஆபரணங்களை அணிந்தவன் அகன்ற மார்பில் முப்புரிநூலும், உருத்திராக்க மாலையும் அணிந்தவன். உடுத்திய உடையின் மேல் பொன்னாலாகிய அரைநாணை அணிந்தவன். திருவடிகளில் வீரக்கழலும், இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற சதங்கையும் சிலம்பும் அணிந்த பெருமையன் என அருளாளர்கள் பாடித்துதிக்கிறார்கள். காண்பாரை மயக்கும் திறமுடைய அவனது மேனிச்சிறப்பை,

**"புரிநூலும் கண்டிகையும் பூம்பட் டுடையும்**
**அரைஞாணும் கச்சை யழகும் – திரு அரையும்**
**நாதக் கழலும் நகுமணிப் பொற் கிண்கினியும்**
**பாதத் தணிந்த பரிபுரமும்"**[10]

என்று குமரகுருபரர் காட்டுகிறார். பகழிக் கூத்தரும் முருகனின் திருக்கோலச் சிறப்பைக் காட்டி, அவ்வழகினைப் பார்த்து மகிழாதவர்கள் உலகில் யார் இருக்கிறார்கள் என்பதை,

**“அறுமுகமுந் தொங்கல் சுமந்த**

**பன்னிருகரமுங் குண்டல முங்குழை**

**யழகு மாரார் பாராதார்”[11]**

என்று போற்றுகிறார். பேரருள் வடிவினை உடைய ஆறுமுகக்கடவுள் திருக்கோவில்களில் ஞானசக்திதரன் முதலாக பதினாறு வடிவங்களில் திருக்கோலம் தாங்கி அருளுவதும் கருதத்தக்கது. உயிர்களுக்கு சுக போகங்களை வழங்கும் பொருட்டே அழகுப் பொருந்திய திருவடிவினைத் தாங்கி முருகன் அருளினை வழங்குகிறார்.

**நிறைவாக**

மாந்தர் தம்மைப் பற்றியுள்ள மலஇருளினை மெலிவடையச் செய்யவும், அடியாருக்கு அருளவும் ஆறு திருமுகங்களைக் கொண்டு முருகன் அருளை வழங்குகின்றான். சிவத்தால் அருளப்பெற்ற அவ்ஆறுவடிவங்களும் உயிர்களாகிய நாம் வீடுபேற்று நிலையை அடையவே என்பதை அருளாளர்கள் உணர்த்தி நிற்கிறார்கள். அவனது ஒவ்வொரு முகமும் பன்னிருக்கரமும் செய்யும் செயல்கள் யாவும் நம் மீது வைத்த கருணை என்பதை நாம் உணர வேண்டும். ஆறுமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் உணர்த்தும் தத்துவமும் அதுவே. நீலமணிமிடற்றானின் ஆற்றலே முருகன் என்பதால் சிவபரத்துவத்தை நினைந்து ஆலமர் செல்வனை வழிபடுவோம். நெஞ்சம் நைந்து முருகனின் புகழ்பாடி கழலடியே போற்றும் வாழ்வியலை மேற்கொள்வோம்.

**அடிக்குறிப்புகள்**

1. கந்தபுராணம். 942.
2. திருப்பரங்கிரி முருகன் பிள்ளைத்தமிழ். 4: 5 – 12.
3. கலித்தொகை. 18: 14 – 15.
4. சிலப்பதிகாரம். 24 : 13.
5. மணிமேகலை. 3: 144 – 145.
6. கந்தபுராணச் சுருக்கம். 56: 7 – 8.
7. பரிபாடல். 5: 9 – 10.
8. கந்த புராணம். 944 : 2.
9. சுப்பிரமணியர் அகவல். 25 – 30.
10. கந்தர் கலிவெண்பா. 55 – 56.
11. திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ். 28: 4 – 6.

**துணைநூற் பட்டியல்**

1. அம்பை சங்கரனார். இரா., (ப.ஆ.), முருகன் பாடல் ஐந்தாம் பகுதி, தெட்சணத்தார் வேளாளர் மகமை, பரிபாலன சொசைட்டி லிமிடெட், 98, ஜிந்துப்பிட்டி தெரு, கொழும்பு, இலங்கை, பதிப்பு – 1995.

2. அம்பை சங்கரனார். இரா., (ப.ஆ.), முருகன் பாடல் ஏழாம் பகுதி, தெட்சணத்தார் வேளாளர் மகமை, பரிபாலன சொசைட்டி லிமிடெட், 98, ஜிந்துப்பிட்டி தெரு, கொழும்பு, இலங்கை, பதிப்பு – 1995.

3. அருணாசலக்கவிராயர், மு.ரா., திருப்பரங்கிரி முருகன் பிள்ளைத்தமிழ், திருப்புகழ்ச் சங்கமம், சென்னை, பதிப்பு –

2020.

4. அருணை வடிவேலனார், சி., (உ.ஆ.), ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் அருளிய கந்தர் கலிவெண்பா விளக்கவுரை, பன்னிரு திருமுறை மன்றம், தெற்காடி வீதி, மதுரை.

5. ஆறுமுக நாவலர், (உ.ஆ.), திருமுருகாற்றுப்படை மூலமும் நச்சினார்க்கினியர் உரைக்கருத்தைத் தழுவி செய்த புத்துரையும், ஆறுமுக நாவலர் வி. அச்சகம், 300, தங்கசாலை வீதி, சென்னை, பதிப்பு – 1955.

6. சம்பந்த சரணாலய சுவாமிகள், கந்தபுராணச் சுருக்கம், தருமையாதீனம், தருமபுரம், பதிப்பு – 1964.

7. சாமிநாதையர், உ.வே., (ப.ஆ.), பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும், 20, கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, பதிப்பு – 1918.

8. சாமிநாதையர், உ.வே., (ப.ஆ.), சிலப்பதிகார மூலமும் அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும், கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, பதிப்பு – 1920.

9. நச்சினார்க்கினியர், கலித்தொகை (மருதக்கலி, முல்லைக்கலி), நோபில் அச்சுக்கூடம், சென்னை, பதிப்பு – 1925.

10. பரிமேலழகர் (உ.ஆ.), பரிபாடல் மூலமும் ஆசிரியர் பரிமேலழகரியற்றிய உரையும், கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, பதிப்பு – 1918.

11. பானுகவி, ம.தி., (உ.ஆ.), கந்தபுராண மூலமும் கலாபூஷண மென்னும் உரையும், தா. குப்புசாமி நாயக்கர் கம்பெனி, சென்னை, பதிப்பு – 1907.

12. பூவண்ணன், (உ.ஆ.), கந்தபுராணம் மூலமும் தெளிவுரையும், தொகுதி -2, வர்த்தமானன் பதிப்பகம், 21, இராமகிருஷ்ணாதெரு, தியாகராய நகர், சென்னை, பதிப்பு – 2017.

13. வேங்கடசாமி நாட்டார், ந.மு., துரைசாமிப் பிள்ளை, சு., (உ.ஆ.), சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 154, டி.டி. கே. சாலை, சென்னை, பதிப்பு – 1994.